**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.39/2020**

**2025 ஆம்** வருடம் பிப்ரவரி மாதம் 04 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.3-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தமிழ்செல்வன் | ஜாதி | : | |
| த.பெ | : | மருதமுத்து | தொழில் | : | வட்ட சார் ஆய்வாளர், நில அளவை, ஆத்தூர் தாலுகா |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | /2025 |

தேதி : 04.02.2025

**முதல் விசாரணை**

இந்த வழக்கின் வாதியான ஜெர்மன் என்பவர் 01.07.2024 அன்று தகவல் பெறும் உரிமை சட்டப்படி மனுதாக்கல் செய்து அவருடைய வீட்டிற்கும், வீட்டிற்கு தென்புறம் உள்ள பஞ்சம்பட்டி - வத்தலகுண்டு சாலைக்கும் இடையே உள்ள இடத்தின் உடைய சர்வே எண், அதனுடைய விஸ்தீரனம், அங்குள்ள சிலுவை திண்ணை விஸ்தீரனம் ஆகியவை தொடர்பாக தகவல் கேட்டு தகவல் உரிமை சட்டபடி மனு அனுப்புள்ளார். அதற்கு எங்கள் அலுவலகத்தில் இருந்து 15.07.2024 அன்று தகவல்கள் அனுப்பப்பட்டது. அந்த தகவலில் எங்களது பதில் அ.பதிவேட்டின் சான்றிட்ட நகல், FMB யின் சான்றிட்ட நகல் அனுப்பப்பட்டது. மேற்கண்ட பதில் தகவல்கள் அடங்கிய கடிதம், அ.பதிவேட்டின் சான்றிட்ட நகல், FMB யின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எங்களது வருவாய் ஆவணங்களின் படி சிலுவைத்திண்ணை என்பது பதிவு செய்யப்படவில்லை, தல ஆய்வு செய்தால் மட்டும் தான் அந்த சிலுவைத்திண்ணை பட்டா இடத்தில் உள்ளதா அல்லது தெருவில் உள்ளதா என்பது தெரியவரும்.

பிரதிவாதிகள் தரப்பில் தோன்றா தரப்பினர்.

**Sd/.Thiru.P.Jaisankar**
District Munsif Cum Judicial Magistrate,
Athoor.